**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 130/2025**

**வா.சா.1 – முரளி**

**<u>06–08–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் Fabric Trading செய்து வருகிறேன். எனது பூர்வீகம் திருப்பூர். நான் BBM படித்துள்ளேன். நான் பிரதிவாதியிடம் வாடகைக்கு 1 வருடத்திற்கு முன்பு வந்தேன். மாத வாடகை ரூ.12,500/– ஆகும். அடவாண்ஸ் தொகை ரூ.40,000/– கொடுத்துள்ளேன் என்றால் ரூ.45,000/– கொடுத்துள்ளேன். நான் வாடகைக்கு வந்த நாள் முதுல் இன்று வரை ஒரு மாத வாடகை கூட கொடுக்கவில்லை என்றால் மாதாமாதம் வாடகை கொடுக்க சென்றபோது, அவர்கள் வாங்கவில்லை. அட்வாண்ஸ்–ல் கழித்துக்கொள்வதாக கூறினார்கள். நான் வாடகைக்கு சென்ற ஒரு மாதத்திற்குள்ளேயே அவரது உறவினருக்கு வாடகைக்கு விட வேண்டுமென்று என்னை காலி செய்யசொன்னார்கள். நான் வாடகைகையை கொடுப்பதற்கு மாற்று ஏற்பாடு செய்தேனா என்றால் வங்கி கணக்கு எண்ணை கேட்டேன் கொடுக்கவில்லை. அவரது அழைப்பேசி மாதத்தில் 20 நாட்கள் சுவிட் ஆப் செய்யப்பட்டிருக்கும். மாதாமாதம் வாடகையை கொடுப்பதற்கு நேரில் சென்றால் வெளியே போகச் சொல்லிவிடுவார்கள்

2. பிப்ரவரி 2025 ஆம் ஆண்டு நான் ரூ.40,000/– முன் பணம் கொடுத்துள்ளேன் என்றால் வருடம் சரி ஆனால் முன்பணமாக ரூ.45,000/– கொடுத்தேன். 01.03.2025 ஆம் தேதியன்று நான் தாவா சொத்திற்கு குடி வந்துவிட்டேன் என்றால் சரிதான். அட்வாண்ஸ்–ல் வாடகையை கழித்துக்கொண்டாலும் 3 முதல் 4 மாதத்திற்குள் அது முடிந்துவிடும் என்றால் சரிதான். தற்போது ஒரு வருடமாக வாடகை கொடுக்காமல் இருந்துவருகிறது என்றால் நான் கொடுக்க தயாராக உள்ளேன். நிலுவை வாடகையை

நீதிமன்றத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கறிஞரிடம் சொன்னேன்.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது).

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.08.06 18:25:33 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.